# எரிசக்தி சேமிப்பு ஆற்றலுடன் புதுப்பொலிவு கண்டுள்ள புக்கிட் பாஞ்சாங் சமூக மன்றம்



மேல்கூரையில் அமைக்கப்பட்டுள்ள சூரிய சக்தித் தகடுகள்.
**படம்: வடமேற்கு சமூக மேம்பாட்டு மன்றம்**

புக்கிட் பாஞ்சாங் சமூக மன்றம், முதல் மேம்பட்ட சமூக மன்றமாக கட்டட, கட்டுமான ஆணையத்தால் ‘கிரீன் மார்க் கோல்ட் ப்ளஸ்’ சான்றிதழைப் பெறும் அளவுக்கு புதுப்பொலிவு கண்டுள்ளது.

சூரியசக்தித் தகடுகள், எரி சக்திப் பயன்பாட்டு உணர்கருவிகள் போன்றவை அதன் புதுப்பிப்புப் பணிகளில் சேர்க்கப்பட்டுள்ளன. சமூக மன்றத்தின் மேல் கூரையில் பொருத்தப்பட்டுள்ள 150 சூரிய சக்தித் தகடுகளால் குறைவான எரிசக்தி பயன்படுத்தப்படும்.

மேலும் எரிசக்தி பயன்பாட்டைக் கண்காணிக்கப் பொருத்தப்பட்டு உள்ள 50 உணர்கருவிகள் எரிசக்தி வீணாவதையும் எரிசக்தியைச் சேமிக்கும் வழிகளையும் உணர்த்தும்.

இந்தப் புதிய முறையால் இந்த சமூக மன்றத்தின் எரிசக்தி நுகர்வு கிட்டத்தட்ட 31 விழுக்காடு சேமிக்கப்பட்டுள்ளது. வழக்கமான ஒளிவிளக்குகள் அனைத்தும் ‘எல்இடி’ விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளன. அதேபோல பல காலமாக வழக்கத்தில் இருக்கும் குளிரூட்டி சாதனங்கள் எரிசக்தி சேமிக்கும் குளிரூட்டிகளாக மாற்றம் கண்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளின் மூலம் மொத்தமாக மாதத்திற்கு 30,000 கிலோவாட் என்றிருந்த எரிசக்தி பயன்பாடு 15,000 கிலோவாட்டாக, அதாவது பாதிக்குப் பாதி குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.